# 61. பணம்

கலிநிலைத்துறை

பணமென் றாற்பிணை முந்துவண் டெழுமெனப் பாரில்
குணமு ளார்தரு மொழியுமொன் றுண்டது குறிக்கின்
உணர்வி லாவதி லுன்பெருந் திருவரு ளுணர்வு
மணமி லார்பலர் மயங்குவ ரென்குரு மணியே.

---

**30. திமிதநிலை** = பேரொலிநிலை. இது, தத்துவசிரேட்ட பரநாதத்தைக் குறிப்பதாகும். திமிதத்தைப் **பிங்கலந்தையிற்** காண்க

பணம் என்றால் பிணமும் துவண்டு எழும் எனப் பாரில்
குணம் உளார் தரும்மொழியும் ஒன்று உண்டு அது குறிக்கின்
உணர்வுஇலா அதில் உன்பெரும் திருவருள் உணர்வு
மணம் இலார்பலர் மயங்குவர் என் குருமணியே.

என் குருமணியே! பணம் என்றால் பிணம் விரைந்து எழும் என உலகில் நல்ல குணம் உள்ளவர் கூறும் பழமொழியும் ஒன்று உண்டு, அதைக் கருதின், அறிவு இல்லாத அதில் உன் பெரும் திருவருள் உணர்வு என்னும் வாசனை இல்லாதவர் பலர் அதற்கு மயங்குவர்! 1

பிரப்பை மசானத்திற் செய்யப்பட்ட சதுரக்குழியொன்றில் விஜய வருஷத்துப் (1895) பங்குனி மாசத்தில் ஒரு சனிவாரந் தொடக்கமாக ஆண்டவனை நாடி நிட்டை சாதித்த அடிகளுக்குப் பயமுண்டாக்கி யெழுப்பிவிட வேண்டுமெனுங் கருத்தானே ஆணும் பெண்ணுமான 6,7 - பேய்கள் சூழ்ந்திருந்துகொண்டு ஐந்திரவும், வருதியென இவரைக் கிளப்பிய பெரிய ஆவியொன்று ஓரிரவுமாக ஆறுதினங்கள் தகைந்து நின்று தங்கருத்துப் பயன்படாமையின் அவை விலகிவிட்டன. ஆறாவது நாள் மனமடங்கி நின்ற அடிகள், இவ்வடிமைக்குச் சொல்ல வேண்டியதுளதேல் அதனைச் சொல்லியருள்கவென்பது முதலிய சொற்களால் இறைவனுக்கு விண்ணப்பித்தனர். ஏழாவது நாளிரவிலே ஜடாமகுடமுடைய இரண்டு முனிவர்களோடு நேர்முகமாக இளைஞுருக்கொடுவந்த பெருமான் ஓரிரகசியமான வார்த்தையை வெளியிட்டருளி முனிவர்களோடு மேற்குத்திசையை நோக்கிச் சென்றுவிட்டனன். அடிகள், அவ்வார்த்தைதான் உபதேசமென்று நன்குமதித்து யோகத் திருப்பவராயினார். 35-ஆந் தினத்திரவு ஆண்டவன் கட்டளைப்படி நிட்டையிலிருந்தெழுந்தனர். தமக்கு ஞானோபதேசஞ் செய்தவன் பரமனாகலின் அவனை இம்முதற்செய்யுட்கண் "என் குருமணியே" என்றது ஏற்புடைத்தே. 69-ஆம் பிரபந்தம் "குருபரக்கண்ணி" எனவெழுந்ததும் இதனையே காட்டுகின்றது. கூறிப்போந்த செய்திகள் சுருக்கமே. விரிவாய யாவும் **சரித்திரம், ஸ்ரீமத் குமரசுவாமியம்** முதலிய பல்லாற்றானும் அறியக் கிடக்கின்றன.

**பொன்னி னாற்பிர யோசன மொருபொழு தேனும்**
**இந்நி லத்திலெய் தாக்கடி களுமதி லிருக்குந்**
**தன்மை யுள்ளன வேலத னாற்பலன் சாரும்**
**உன்ன மானுடர் விடுவர்கொல் பொன்னசை யுரியோய்.**

---

2. **கடிகள்** = பேய்கள்.

பொன்னினால் பிரயோசனம் ஒரு பொழுதேனும்
இந்நிலத்தில் எய்தாக் கடிகளும் அதில் இருக்கும்
தன்மை உள்ளன வேல் அதனால் பலன் சாரும்
உன்ன மானுடர் விடுவர்கொல் பொன்நசை உரியோய்.

எனக்கு உரிமை உடையவனே! பொன்னினால் இவ்வுலகில் ஒரு பொழுதேனும் பயனை அடையாத பேய்களும், அதனைக் காத்துக் கிடக்கும் தன்மை உள்ளன என்றால் அதனால் பலனைப் பெறச் சார்ந்திருக்க நினைக்கும் மானுடர் பொன் ஆசையை விடுவார்களோ? 2

**பொருள வாவினர்க் கிருவகைப் பந்தமும் போமோ**
**அருளு மேவிடு மோபொரு ளாசையி னாலே**
**கருது பாவமுஞ் செய்கிற பாவமுங் கணிக்க**
**ஒருவ ராலிவ ணாவதென் மாமயி லுகைப்போய்.**

பொருள் அவாவினார்க்கு இருவகைப் பந்தமும் போமோ
அருளும் மேவிடுமோ பொருள் ஆசையினாலே
கருது பாவமும் செய்கிற பாவமும் கணிக்க
ஒருவரால் இவண் ஆவதுஎன் மாமயில் உகைப்போய்.

பெரிய மயில்வாகனத்தைச் செலுத்துவோனே! பொருளை விரும்பினவர்க்கு அகப்பற்று, புறப்பற்று எனும் இருவகைப் பற்றுக்கள் ஒழியுமோ? அருள் வந்து சேருமோ? பொருள் ஆசையினால் நினைக்கும் பாவமும், செய்யும் பாவமும், அளவிட்டுரைக்க இங்கு ஒருவரால் முடியுமோ? 3

**இரவி னித்திரை யின்மையும் பகலிடை யிளைப்பும்**
**தரவி ருப்பது மீனரை மூடரைச் சார்ந்து**
**பரவிப் பஃறொழில் பார்த்திடப் பழிதொழி லெல்லாம்**
**புரியச் செய்வதும் பொருணசை யேபரம் பொருளே.**

இரவில் நித்திரை இன்மையும் பகல் இடை இளைப்பும்
தர இருப்பதும் ஈனரை மூடரைச் சார்ந்து
பரவிப் பல்தொழில் பார்த்திடப் பழிதொழில் எல்லாம்
புரியச் செய்வதும் பொருள் நசையே பரம்பொருளே.

**4.** பரவி = துதித்து; **நிகண்டுகள்** காண்க.

பரம்பொருளே! இரவில் தூக்கம் இல்லாமல் போதலும், பகலில் இளைப்பு உண்டாக்கித் தர இருப்பதும், ஈனரையும் மூடரையும் சார்ந்து துதித்துப் பல தொழில்களைச் செய்யத் தூண்டுவதும், பிறர் பழிக்கும் தொழில்களைச் செய்யும்படிச் செய்வதும் பொருள் ஆசையே ஆகும். 4

**அறிவி லாப்பொருள் வாழ்வினை விரும்பிடு மகந்தான்**
**அறிவி னாரருள் வாழ்க்கையெண் ணாதிருந் திடுமோ**
**அறிபு லால்விழிக் கருடெரி யாவறி தாலே**
**யறிவி லோங்கயிர்ப் பேயதை நீத்ததென் னரசே.**

அறிவு இலாப் பொருள் வாழ்வினை விரும்பிடும் அகம்தான்
அறிவினார் அருள் வாழ்க்கை எண்ணாது இருந்திடுமோ
அறிபுலால் விழிக்கு அருள்தெரியா வறிதாலே
அறிவில் ஓங்கு அயிர்ப்பே அதை நீத்ததுஎன் அரசே.

என்னுடைய அரசனே! அறிவில்லாத பொருளைத் தேடும் வாழ்வினை விரும்பிடும் மனம் அறிவுடையார் வாழும் அருள் வாழ்க்கையை நினைத்துப் பார்க்காது இருந்திடுமோ? அறியும் தூலக்கண்ணுக்கு அருள் என்ன என்பது தெரியாத சிறுமையினால் அறிவில் மேலோங்கும் சந்தேகமே அதை நீக்கியது. 5

**நல்வி வேகிகள் பெருமவிங் கதிகமு நாட்டார்**
**கல்வி கேள்விக ளுயர்தெய்வம் வழிபடு கருமம்**
**பல்வி வாதம்வி டாப்பிர சங்கமென் பவைகள்**
**தொல்வி னோதபு விப்பயன் கருதுபு தொடர்வார்.**

நல்விவேகிகள் பெரும இங்கு அதிகமும் நாட்டார்
கல்வி கேள்விகள் உயர் தெய்வம் வழிபடு கருமம்
பல்விவாதம் விடாப் பிரசங்கம் என்பவைகள்
தொல் வினோத புவிப்பயன் கருதுபு தொடர்வார்.

சிறந்த அறிஞர்கள் வழிபடும் பெருமானே! இங்கு நாட்டில் உள்ளவர்கள் அதிகம் கல்வி, கேள்வி, மேலான தெய்வம், வழிபடு செயல்கள், பலவகை விவாதங்கள், விடாமல் சொற்பொழிவு செய்தல் என்பவைகளைத் தொன்மையாக உள்ள வினோதமான உலகப் பயன் கருதிச் செய்வார்கள். 6

5. அயிர்ப்பு = சந்தேகம்.

**தொடரு மன்னவ ருட்சிலர் தொன்னிலம் புகழப்**
**படரு வார்சிலர் மறுமையிற் பலிக்கவென் றயர்வார்**
**இடரி லாச்சில ரன்புட னீட்டுவ ரிவர்க்கே**
**கடவு ணன்றிப ராட்டுத லெனக்குமோர் கடனே.**

*தொடரும் அன்னவருள் சிலர் தொல்நிலம் புகழப்*
*படருவார் சிலர் மறுமையில் பலிக்க என்று அயர்வார்*
*இடர் இலாச்சிலர் அன்புடன் நீட்டுவர் இவர்க்கே*
*கடவுள் நன்றி பாராட்டுதல் எனக்கும் ஓர் கடனே.*

தொடர்ந்து செய்யும் அனைவருள் சிலர் பழமையான இவ்வுலகம் புகழ வேண்டும் என்பதற்காகச் செய்வர்; சிலர் மறுமைப் பயன் கருதிச் செய்வர்; துன்பம் இல்லாச் சிலர் அன்புடன் ஈவர். இத்தகையவர்க்கே கடவுள் நன்மை செய்தல் வேண்டும் என வேண்டுதல் எனக்கும் ஓர் கடமையாகும். 7

**உலக வாழ்வினை நீத்தருந் துறவற முறுவோர்**
**சிலவ ரேயவ ருட்சிலர் தேகநொவ் வாதி**
**பலவு பாதிகள் சகிக்கவொல் லாப்பரி சான்முன்**
**நிலைமை நாடிவந் திடுவரெ னாதரு ணிதியே.**

*உலக வாழ்வினை நீத்து அரும் துறவறம் உறுவோர்*
*சிலவரே அவருள் சிலர் தேக நொவ்வு ஆதி*
*பல உபாதிகள் சகிக்க ஒல்லாப் பரிசால் முன்*
*நிலைமை நாடி வந்திடுவர் அருள்நிதியே.*

அருட்செல்வமே! இவ்வுலக வாழ்வைத் துறந்து அரிய துறவறம் கொண்டோர் சிலரே உண்டு; அவருள் சிலர் உடல் நோய் முதலிய பல துன்பங்களைத் தாங்க முடியாத தன்மையால் முன்னிருந்த இல்லற வாழ்வை நாடி வந்திடுவர். 8

**துறவி லேசிலர் துன்புகள் சகித்திருந் தானும்**
**மறைவி னின்றெழு வாசனை யான்மன மடங்காக்**
**குறைவு கொண்டுழி தருவரிக் குறைவினு ளெதையும்**
**உறவெ னெஞ்சுள தோநவி லயிற்படை யுடையோய்.**

*துறவிலே சிலர் துன்புகள் சகித்துஇருந்தாலும்*
*மறைவில் நின்று எழு வாசனையால் மனம் அடங்காக்*
*குறைவு கொண்டு உழிதருவர் இக்குறைவினுள் எதையும்*
*உறஎன் நெஞ்சு உளதோ நவில் அயில்படை உடையோய்.*

வேற்படை உடையவனே! துறவறத்தில் சிலர் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டிருந்தாலும், மறைவாக அவர்தம் பழக்க வாசனை நின்று அவர் மனம் அடங்காத குறைகொண்டு உழல்வர்; இக்குறைவினுள் எதையும் செய்ய என் மனம் உள்ளதோ? கூறுவாயாக. 9

**ஆளு நின்னடி யன்றிமண் ணாசைபொன் னாசை**
**நீளு மென்குழன் மங்கைய ராசையி னீங்காக்**
**கோளு ளோர்களு ஞானிக ளோபுகழ் குயின்றோன்**
**நாளு நாடிய தெய்வமுள் கென்னவளை நபமே.**

ஆளும்நின் அடி அன்றி மண் ஆசை பொன் ஆசை
நீளும் மென் குழல் மங்கையர் ஆசையில் நீங்காக்
கோள் உளோர்களும் ஞானிகளோ புகழ் குயின்றோன்
நாளும் நாடிய தெய்வம் உள்கு எனை வளை நபமே.

திருப்புகழ் பாடியருளிய அருணகிரிநாதர் நாள்தோறும் நாடிய தெய்வத்தை நினைக்கும் என்னை வளைக்கும் அறிவாகாசமே! அடிமைகொண்ட உன் திருவடியை அல்லாமல், மண்ணாசை, பொன்னாசை. நீண்ட மெல்லிய கூந்தலுடைய பெண்களின் ஆசை ஆகியவை நீங்காத குற்றம் உள்ளோர்களும் ஞானிகள் ஆவார்களோ? 10